பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 10 2025 TUESDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை நேர்மையையும், நீதியையும் நிலைநாட்டியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. குஜராத், ஹரியானா மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த 730 கோடி ரூபாயை, 15-ஆவது நிதிக்குழு ஒதுக்கீடு செய்துள்ளது.

4. அமெரிக்கா – சீனா இடையேயான உறவு சிறப்பாக உள்ளது என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

5. தமிழகத்தில் மிக கனமழைக்கான எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, நமது நேர்மை மட்டுமின்றி, நீதியையும் நிலைநாட்டியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தீபாவளி பண்டிகையையொட்டி நாட்டு மக்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களில், நக்சல் மற்றும் மாவோயிஸ்ட் தீவிரவாதம் வேரோடு பிடிங்கி எறியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அப்பகுதியில் உள்ள மக்கள் வன்முறையை கைவிட்டு, அரசியலமைப்பின்பால் நம்பிக்கை வைத்து, வளர்ச்சிப்பாதைக்கு திரும்பி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்சார்பு இந்தியா, வளர்ச்சியடைந்த பாரதம் உள்ளிட்ட இலக்குகளை எட்ட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடிமகனின் தலையாய பொறுப்பு என்று அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீராமபிரான் மக்களுக்கு நேர்மையான பாதையில் நடக்க கற்றுத் தந்திருப்தோடு மட்டுமின்றி, அநீதியை எதிர்த்து தைரியத்துடன் போராடவும் கற்றுத்தந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்

நேற்றைய தீபாவளி பண்டிகையின்போது, பல இடங்களில் வீடுகளில் தீபம் ஏற்றிவைத்திருந்ததை காணமுடிந்ததாக பிரதமர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று காவலர் வீர வணக்க நாளையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ராணுவமும், காவல்துறையும் வெவ்வேறு நிலைகளில் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், நாட்டின் பாதுகாப்பு ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல்பட்டுவருவதாக தெரிவித்தார்.

முப்படைகளும், காவல்துறையும் நாட்டின் பாதுகாப்பில் தூண்களாக விளங்குகின்றன என்று குறிப்பிட்டார்.

புதிய வகையான குற்றங்கள், தீவிரவாதிகளின் செயல்பாடுகள் பெரும் சவாலாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்நாட்டில் சமூகங்களுக்கு இடையே நிலவும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குற்றவாளிகள் மிகுந்த திட்டமிடலுடன் செயல்படுவதால், குற்றங்களை கண்டுபிடிப்பதும் மிகவும் சிக்கலாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இருப்பினும், இந்த சவால்களை உறுதியுடன், காவல்துறையும், ராணுவமும் கையாண்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

குற்றங்களை தடுப்பதில் காவல்துறையினர் ஆற்றிவரும் பங்கு மகத்தானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் நம்பிக்கையை அவர்கள் பெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய காவல் படையினர், எல்லை காவல்படையினர், உள்ளூர் நிர்வாகத்துடன் இணைந்து இடதுசாரி தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயலாற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நாட்டின் அனைத்துப்பகுதிகளில் இருந்தும் இடதுசாரி தீவிரவாதம் முற்றிலுமாக அகற்றப்படும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<>>>>>

குஜராத் மற்றும் ஹரியானா மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில், 15-ஆவது நிதிக்குழு 730 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது.

குஜராத் மாநிலத்திற்கு கடந்த ஆண்டின் இரண்டாவது தவணையாக 522 கோடி ரூபாயும், ஹரியானா மாநிலத்திற்கு நடப்பாண்டின் முதல் தவணையாக 195 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம், தூய்மைப்பணிகள், குடிநீர் விநியோகம் மற்றும் பாதுகாப்பான தனிநபர் கழிப்பறை வசதி போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக மத்திய அரசு இந்த தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது.

<<<<<<>>>>>

பிலிப்பைன்சில் உள்ள உலக வங்கிக்கு மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி தலைமையிலான குழுவினர் சென்றுள்ளனர்.

மூன்று நாட்கள் அங்கு தங்கியிருக்கும் இக்குழுவினர் திறன் மேம்பாடு, பணியாளர்களை பகிர்ந்துகொள்ளுதல், புள்ளியியல் தகவல் அடிப்படையிலான கொள்கை வகுத்தல் போன்றவற்றில் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

திறன் மேம்பாட்டு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், உத்தரப்பிரதேசம். மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், தெலங்கானா ஆகிய மாநிலங்களின் பிரதிநிதிகளும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளால் பல்வேறு பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள், தீபாவளி பண்டிகையின்போது, குறைந்த விலையில் ஆடைகள் மற்றும் பரிசுப் பொருட்களை வாங்க முடிந்ததாக தெரிவித்தனர்.

<<<<<<>>>>>

குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களவை தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன், இன்று மாநிலங்களவை செயலகத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளை பார்வையிட்டார்.

அவை குறிப்புகளை தாக்கல் செய்யும் பிரிவு, சட்டப்பிரிவு, கேள்வி பிரிவு, உறுப்பினர்களின் சம்பள பிரிவு, தகவல் அறிவிப்பு பிரிவு, பார்வையாளர்கள் அலுவலகம், செய்தியாளர்கள் பிரிவு ஆகியவற்றை இன்று பார்வையிட்டார்.

செயலக அதிகாரிகளுடன் ஒவ்வொரு பிரிவுகளின் செயல்பாடுகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

மாநிலங்களவையை சுமூகமாக நடத்திச் செல்ல செயலகப் பணியாளர்கள் உதவிட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஊழியர்களுக்கு தமது தீபாவளி வாழ்த்துகளையும் குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துக்கொண்டார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் தீபாவளி பண்டிகையின்போது காற்று மற்றும் ஒலி மாசு அளவுகள் வரையறுக்கப்பட்டதைவிட அதிகமாக இருந்தது கண்டறியப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

தீபாவளி பண்டிகையின்போது பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் காற்று மாசு 39 இடங்களிலும், ஒலி மாசு 34 இடங்களிலும் ஆய்வு செய்யப்பட்டதாக கூறியுள்ளது.

சென்னையை பொறுத்தமட்டில் காற்று மாசின் அளவு பெசன்ட் நகரில் குறைந்தபட்சமாக 190 என்ற மிதமான அளவில் பதிவாகியுள்ளது.

சென்னையில் வளசரவாக்கத்தில் காற்று மாசு குறியீடு 332-ஆக பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தமிழகத்திலேயே அதிகபட்ச அளவாகும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் காற்றின்தரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இன்று நண்பகல் நிலவரப்படி, தில்லியில் காற்று மாசின் அளவு 357-ஆக பதிவாகியுள்ளது.

தில்லி காற்றின் தர நிர்வாக ஆணையத்தின் துணைக்குழு, தலைநகர் தில்லி மண்டலத்தில் காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்காக Grap-2 என்ற செயல் திட்டத்தை அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>

அமெரிக்கா – சீனா இடையேயான உறவு சிறப்பாக உள்ளது என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, வாஷிங்டனில் பேசிய அவர், வரும் நாட்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தில் நியாயமான உடன்பாடு ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தாம் சீனாவுக்கு அழைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்த திரு ட்ரம்ப், மலேசியா, ஜப்பான், தென்கொரியா நாடுகளுக்கு வரும் மாதங்களில் செல்லவுள்ளதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் கன மற்றும் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளா, மாஹே, லட்சத்தீவுகள், அந்தமான் நிக்கோபார் தீவுகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒடிஷா, தெலங்கானா, கர்நாடகாவின் உட்பகுதி, கேரளா, லட்சத்தீவு பகுதிகளில் இடி-மின்னலுடன் கூடிய கனமழையும், சூறைக்காற்றும் வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தென்மேற்கு மற்றும் கிழக்கு அரபிக்கடல் பகுதியிலும், லட்சதீவு பகுதிகள், கர்நாடகா, கேரளா மற்றும் தென் தமிழக கடலோரப்பகுதிகளில் பலத்த சூறைக்காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

<<<<<<>>>>>

கோவாவில் நடைபெறும் உலக செஸ் கோப்பைக்கான இலட்சினையையும், பாடலையும் அம்மாநில முதலமைச்சர் திரு Pramod Sawant இன்று வெளியிட்டார்.

இம்மாதம் 31-ஆம் தேதிமுதல், அடுத்த மாதம் 17-ஆம் தேதிவரை இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

<<<<<<>>>>>